அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 09/2021

எனது இலக்கம்: EST-6/03/LEA/3186-1

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.05.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்

## பட்டதாரி பயிலுநர்களுக்கு லீவு வழங்குதல்

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் / டிப்ளோமாதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சி வழங்குதல் - 2020 திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களில் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர்களின் லீவு தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதற்கு 2021.05.03 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

I. அனைத்து பட்டதாரி பயிலுநர்களுக்கும் பயிற்சிக் காலத்தினுள் ஒரு மாதத்திற்கு சம்பளத்துடன் இரண்டு (02) நாள் லீவுகளை வழங்குவதற்கும், அவ்விருநாட்களுக்கு மேலதிகமாக மாதத்தினுள் பெறப்படும் லீவு சம்பளமற்ற லீவாகவும் கருதி ஒரு மாதக் கொடுப்பனவில் 1/30 இற்குச் சமனான தொகை வீதம் குறைத்தல்.

II. ஒரு வருட பயிற்சி காலப் பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பெண் பட்டதாரி பயிலுநர்களுக்கு பிள்ளை பிறந்ததிலிருந்து சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த என்பத்து நான்கு (84) நாட்களுக்கு முழுச் சம்பளத்துடன் பிரசவ லீவை வழங்குதல்.

III. பட்டதாரி பயிலுநர் நியமனம் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் பிரசவம் நிகழ்ந்து என்பத்து நான்கு (84) நாட்களை விஞ்சாத சகல பெண் பட்டதாரி பயிலுநர்களும் இவ்வேற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொண்டு இத்திகதிக்கு முன்னர் சம்பளமற்ற லீவினைப் பெற்றிருப்பின் அச்சம்பளமற்ற லீவினை முழுச் சம்பத்துடன் லீவாகக் கருதப்படும்.

*02.* அதன்படி, அவசியப்படும் நடவடிக்க எடுக்குமாறும், தங்களுக்கு கீழ் இயங்கும் சகல நிறுவனங்களுக்கும் அறியப்படுத்துமாறும்கேட்டுக்கொள்கினறேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சிஅமைச்சு